**MCOP.No. 473/2024**

Date : 26.03.2026

Witness Name & Rank - விக்னேஷ் - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. மேற்படி விபத்து எந்த தேதியில் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 25.09.2024ம் தேதி மாலை 4.30 மணிக்கு நடந்தது. என் மீது மோதியாக சொல்லப்படும் வாகனம் பள்ளி பேருந்து என்றால் சரிதான். விபத்து நேரத்தில் மேற்படி பேருந்தில் பள்ளி மாணவர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். பொதுவாகவே பள்ளி வாகனத்தில் வேக கட்டுபாட்டு கருவி பொறுத்தப்பட்டிருக்கும் எனவே அந்த வாகனத்தால் வேகமாக செல்ல முடியாது அதனால் எனது அதிகவேகத்தால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் வாகனத்தில் சென்ற போது தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல.
2. நான் விபத்து நடந்தவுடன் முதலில் ஆல்வா மருத்துவமனைக்கும் பிறகு பொள்ளாச்சி அரசு மருத்துவமனை அதன் பிறகு அருண் மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். இருந்த போதும் எனது முதல் விசாரணையில் அரசு மருத்துவமனை தொடர்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி அரசு மருத்துவமனையில் விபத்து தொடர்பாக நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனவே எனது வழக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் மேற்படி அரசு மருத்துவமனையில் நான் தான் பேருந்தின் கதவில் மோதியாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி விபத்து நேரத்தில் மது போதையில் இருந்ததாக அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து நடந்து ஒரு நாள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது கவனக்குறைவால் விபத்து நடந்ததால் தான் புகார் காலதாமதாக கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.
3. எனது மாத வருமானத்தை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தொடர் சிசிக்சையில் உள்ளதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது

கவனக்குறைவால் விபத்து நடந்தள்ளதால் 3 வது எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---